1978 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) பரிசீலனை செய்யும் உத்தேசமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஸ்டூடண்ட்ஸ் கைடன்ஸ் பீரோ என்ற அமைப்பு இயங்கி வருகிறது. அது அரசாங்க அங்கீகாரம் பெற்றுள்ளதா? அதில் பதிவு செய்துள்ளவர்கள் அரசு நடத்துகிற நேர்முகத் தேர்வுகளுக்குச் செல்ல வாய்ப்பு கொடுக்கப் படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேலை தேடித்தரும் நிலையங்கள் தருகிற விவரங்களை வைத்துத்தான் வேலைகள் அளிக்கப்படுகின்றன. பல்கலைக் கழகத்திலுள்ள அந்த கைடன்ஸ் பீரோ ஆலோசனை கூறுகிற அளவில் தங்கள் பணியைச் செய்து வருகிறது.

Teachers of Panchayat Unions.

* 58 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that teachers serving under Panchayat Unions are not permitted to avail themselves of leave on private affairs; and

(*b*) if so, the decision taken thereon ?

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள், தங்களது சொந்த அலுவல்களை முன்னிட்டு விடுப்பில் செல்வதற்கு அனுமதிக் கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : ஆசிரியர்கள் பலவிதமான விடுப்பு சலுகைகளை அனுபவிக்கிறார்கள். அதே அடிப்படையில் "லீவ் ஆன் பிரைவேட் அஃபையர்ஸ்" என்று ஆறுமாத காலத்திற்கு அரை ஊதியம் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்தச் சலுகையை ஊராட்சி ஒன்றியத்தில் பணி புரியும் ஆசிரியர்கள் பெற முடியாமல் இருக்கிறார்கள். அது குறித்துத்தான் கேள்வி கேட்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சலுகையை ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தச் சலுகை அவர்களுக்கு இருக்கிறது என்பதைத்தான் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சலுகை சட்டத்தில் இருக்கிறது. அங்குள்ள நிர்வாகிகள் அதைத் தர மறுக்கிறார்கள். அரசே தந்திருக்கிற சலுகைகள் எந்தக் காரணத்தைக் கொண்டும் மறுக்கப்படக் கூடாது என்ற குறிப்பை அரசு ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு அனுப்புமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சட்டம் போடுவதே அதைப் பின் பற்ற வேண்டுமென்பதற்காகத்தான். யாராவது அப்படிச் செயல்படவில்லை என்றால், உரிய நடவடிக்கையை நிச்சயமாக அரசு எடுக்கும்.

திரு. பி. ஆர். தாமஸ் : அநேக ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் அதை மறுக்கிறார்கள், ஆசிரியர்கள் மனு கொடுக்கும்போது. அப்படி மறுக்கப் பட்ட மனுக்களைப் பற்றிய புகாரை உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நிச்சயமாக எடுக்கப்படும்.

Government Dental Wing.

* 59 *Q.*—Thiru A. BALASUBRAMANIAM : Will the Hon the Minister for Health be pleased to state—

(*a*) whether any enquiry was conducted on the complaint given by an Ex-Member of Parliament on the Chief of the Government Dental Wing, Madras; and

(*b*) if so, the decision taken thereon ?